**Tamil Nadu Electricity Board Engineers' Sangam**

**தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்**

Regd. No. 124/MDS (Recognised)

(Affiliated to All India Federation of Power Diploma Engineers)

144, Electricity Avenue, Anna Salai, Chennai - 600 002.

44, Ramasamy Garden Street, Royapetah, Chennai - 600 014.

Phone : 28521968, E-mail : tnebes@yahoo.co.in

| PRESIDENT | GENERAL SECRETARY | TREASURER |
|---|---|---|
| Er. A.ANTONYPADOVARAJ | Er. V. ASHOKKUMAR | Er. R.BADRINARAYANAN |
| 94438 72166 | 94442 13621 | 96001 49791 |


பெறுதல்

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சென்னை–600 002.

<u>க.எண்.பொ.செ./த.மி.வா.பொறியாளர் சங்கம்/கோ.எண்.1/ தீர்மானம் எண்.24 /தேதி 1.12.2016.</u>

ஐயா,

பொருள்: தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம் – 50வது மாநில பொதுக்குழு மற்றும் மாநில செயற்குழு தீர்மானம் – ECE, CS, IT – சிறப்பு அனுமதியாக உதவிப் பொறியாளர் / உள்முகத்தேர்வு – வழங்கிட வேண்டுதல் – தொடர்பாக.

பார்வை: 1. மாநில பொதுக்குழு தீர்மானம் கடித நாள் 21.07.2016.
2. மாநில செயற்குழு நாள் 26.11.2016.

---

தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கத்தின் 50வது மாநில பொதுக்குழு கூட்டத்தில் இயற்றப்பட்ட தீர்மானத்தின் மீது வாரியம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டி மாநில செயற்குழு கூட்டத்தில் மீண்டும் வலியுறுத்தப்பட்டு தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது.

**<u>தீர்மானம்–24</u>**

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் உதவிப் பொறியாளர் பதவிகள் உள்முகத்தேர்வு மூலமாகவும், நேரடி நியமனம் மூலமாகவும், வாரிசு வேலை மூலமாகவும் நிரப்பப்படுகின்றது.

வாரிசு வேலை வழியாக பொறியியல் பட்டம் பெற்றவர்கள் நேரடியாக உதவிப் பொறியாளராக பணி நியமனம் பெற்று வந்துள்ளனர். ஆனால் வாரிய ஆணை (Per)B.P.(F.B.) No.25, (Adm.Br.) Dt.21.06.2007ன்படி இரண்டாம் நிலை பணித்தொகுதிக்கு (AE) வாரிசு வேலை மூலம் பணி நியமனம் மறுக்கப்பட்டுள்ளது. பட்டக்கல்வியில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்கள் தொழில்நுட்ப உதவியாளராகவும், இரண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்கள் களப்பணி உதவியாளராகவும் நியமிக்கப்பட்டு வாரியப்பணியாற்றி வருகின்றனர். இதனால் அவர்களது கல்விக்கேற்ற பணி மற்றும் முன்னுரிமை பாதிக்கப்பட்டுள்ளது.

# Tamil Nadu Electricity Board Engineers' Sangam

பொறியியல் பட்டம் பெற்றுள்ள வாரியப் பணியாளர்கள் உள்முகத்தேர்வு மூலம் உதவிப் பொறியாளராக பணி நியமனம் பெறுகின்றனர். இதிலும் மின்னியல், மின்னனுவியல், கணிணி, கருவி காத்தல் போன்று பல பிரிவுகளுக்கு வாரியத்தில் குறிப்பிட்ட சதவீதம் மட்டுமே (வாரிய ஆணை 12 நாள் 21.08.2014) உள்முகத்தேர்வு அளிக்கப்படுகிறது.

பொறியியல் கல்வி பயில்கின்றவர்கள் பெரும்பாலும் பணித்தேவைக்கேற்ப பாடப் பிரிவுகளை தேர்வு செய்து பயில்கின்றனர். இந்நிலையில் வாரிசு வேலை மூலம் வந்துள்ள பணியாளர்கள் பெரும்பாலும் **ECE** பட்டம் பெற்றுள்ளதால், வாரிய விதிப்படி குறைவான இடங்கள் உள்முகத்தேர்வில் அனுமதிக்கப்படுவதால், இவர்களால் உதவிப் பொறியாளர்களாக உள்முகத்தேர்வில் பல ஆண்டுகளாக தேர்வு பெறமுடியாமல் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களைக் காட்டிலும் பின்னால் பட்டம் பெற்றவர்கள், வாரியப் பணியில் இளையவர்கள் **(Juniors)** பலர் ஏற்கனவே உள்முகத்தேர்வு மூலம் உதவிப் பொறியாளர்களாகியுள்ளனர். மிகக்குறைந்த எண்ணிக்கையில் (சுமார் 60 பணியாளர்கள்) உள்ள இவர்கள் பல ஆண்டுகளாக உரிய கல்வி தகுதி இருந்தும் உதவிப் பொறியாளாளராக தேர்வு பெற முடியாமல் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். கடந்த காலங்களில் இதுபோன்று தேக்கமுற்று பல ஆண்டுகள் உள்முகத்தேர்வு பெறாத நிலையில் வாரியம் சிறப்பு அனுமதியாக உதவிப் பொறியாளர் / உள்முகத்தேர்வு வழங்கியுள்ளது.

எனவே, வாரியத்தேவையை கருத்தில் கொண்டும், வாரியப் பணியாளரை இழந்து பாதிக்கப்பட்டு வாரிசு வேலை மூலம் வாரியப் பணியேற்று நேரடியாக உதவிப் பொறியாளராக வர இயலாமல் தடுக்கப்பட்டும், உதவிப் பொறியாளர் உள்முகத்தேர்வில் குறைவான உள்ஒதுக்கீடு காரணமாகவும் பாதிக்கப்பட்டுள்ள பொறியாளர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் வாரியம் கடந்த காலங்களில் அளித்தது போன்று சிறப்பு அனுமதியாக உதவிப் பொறியாளர் / உள்முகத்தேர்வு இம்முறை வழங்கிட வாரியத்தை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி,

தங்கள் உண்மையுள்ள,

( வி. அசோக்குமார் )
பொதுச் செயலாளர்.

03/12/16

__நகல்__

இயக்குநர் / விநியோகம் / த.மி.உ.மற்றும் பகிர்மான கழகம்.
தலைமைப் பொறியாளர் / பணியமைப்பு / த.மி.உ.மற்றும் பகிர்மான கழகம்.